முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02ம் நாள், வியாழக்கிழமை
அசல் வழக்கு எண்.383/2009
CNR No.TNMD130001532009
மற்றும்
அசல் வழக்கு எண்.499/2009
CNR No.TNMD130001772009

**அசல் வழக்கு எண். 383/2009**

கொண்டப்பன் ... வாதி

/ எதிர் /

1) ராவுத்தன்
2) ஆறுமுகம் என்ற அம்மாவாசி(இறப்பு)
3) முத்துவேல்
4) குருவத்தாய்
5) முத்துப்பாண்டி ... பிரதிவாதிகள்

**அசல் வழக்கு எண்.499/2009**

1) ஆறுமுகம் என்ற அம்மாவாசி(இறப்பு)
2) குருவத்தாய்
3) முத்துப்பாண்டி ... வாதிகள்

/ எதிர் /

கொண்டப்பன் ... பிரதிவாதி

அசல் வழக்கு எண்.383/2009 மற்றும் அசல் வழக்கு எண்.499/2009 ஆகிய இரண்டு வழக்குகளிலும் வழக்குச்சொத்தும், வழக்கு தரப்பினர்களும் ஒன்றாக உள்ள நிலையில் அசல் வழக்கு எண்.383/2009 ல் இரண்டு அசல் வழக்குகளுக்கும் சேர்த்து Joint Trial செய்ய 06.08.2018ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு, இருதரப்பு விசாரணை செய்யப்பட்டு, சாட்சி சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டும், மேற்படி இரண்டு வழக்குகளிலும் பொதுவான தீர்ப்புரை பிறப்பிக்க இந்நீதிமன்றம் தீர்மானித்தது.

இருவழக்குகளும் 25.03.2026ம் தேதி அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, **அசல் வழக்கு எண்.383/2009** வழக்கின், வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.N.நமசிவாயம்** அவர்கள் முன்னிலையாகியும், 1, 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.K.P.S.இளங்கோவேல்ராஜன்** அவர்கள் முன்னிலையாகியும், 2ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையில்,

**அசல் வழக்கு எண்.499/2009** வழக்கின், வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.K.P.S.இளங்கோவேல்ராஜன்** அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.N.நமசிவாயம்** அவர்கள் முன்னிலையாகியும்,

இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்குரை, எதிர்வழக்குரைகள், எழுத்துப்பூர்வமான வாதுரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## பொதுவான தீர்ப்புரை

1. **அசல் வழக்கு எண்.383/2009ல்**, தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்ய கோரியும், அதை தொடர்ந்து பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ வாதியின் அனுபவத்தில் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இவ்வழக்கின் செலவுத்தொகை கோரியும், வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **அசல் வழக்கு எண்.499/2009ல்**, தாவா சொத்தில் உள்ள வாதிகளின் அனுபவத்தை இந்த நிர் பிரதிவாதியோ அல்லது அவரது ஆட்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இவ்வழக்கின் செலவு தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மேலும், இத்தீர்ப்புரையில் குழப்பத்தை தவிர்க்கும்விதமாக இருவழக்குகளும் ஒருசேர தீர்ப்புரை பிறப்பிப்பதால் OS.383/2009ன்**

**வாதி இந்த பொதுவான தீர்ப்புரையில் வாதி என்றும், பிரதிவாதிகள் இத்தீர்ப்புரையில் பிரதிவாதிகளாவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளார்கள்.**

**<u>3) OS No.383/2009ன் வழக்குரையின் சுருக்கம் :– (OS No.499/2009 ன் எதிர்வழக்குரையின் சுருக்கம்)</u>**

3.1) தாவாச் சொத்து மற்றும் அதற்கு தெற்கில் உள்ள சொத்தும் கந்தசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றும், சுப்புராமன் மற்றும் பழனிக்குமார் ஆகியோர் மேற்படி கந்தசாமி கவுண்டருக்கு மகன்கள் என்றும், மேற்படி சுப்புராமன் மற்றும் பழனிக்குமாருக்கும் தாவா சொத்தை பொதுவாகவும் வீட்டினை தனித்தனியாகவும் அனுபவம் செய்து வந்தனர் என்றும், வீட்டின் வட பகுதியை சுப்புராமனும், தென் பகுதியை பழனிக்குமாரும் அனுபவம் செய்து வந்தனர் என்றும், தாவா சொத்து வீட்டிற்கு வட பகுதியில் உள்ளது என்றும், வாதி 25.04.1979ம் தேதி பழனிக்குமாரின் பங்கை ஒரு பதிவு கிரையப் பத்திரத்தின் மூலம் அவரது மனைவி மற்றும் மகளிடமிருந்து கிரையம் பெற்றதாகவும், மேலும், 30.06.1980ம் தேதி சுப்புராமனின் பங்கை பதிவு கிரைய பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்றதாகவும்,

3.2) இந்த பிரதிவாதிக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும், அனுபவமும் கிடையாது என்றும், அதுமட்டுமல்லாமல் தாவா சொத்தின் வடக்கு பகுதியில் ஒரு சிறு பகுதியை கிரையம் பெற பிரதிவாதிகள்

முயற்சி செய்ததாகவும், அதற்கு வாதி மறுப்பு தெரிவிக்கவே வாதி மீது வஞ்சம் கொண்டு தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகள் அவ்வப்போது இடையூறு செய்து வந்ததாகவும், வாதி இந்த பிரதிவாதிகளின் சட்ட விரோத செயலை பல முறை எச்சரித்தும் இந்த பிரதிவாதிகள் எதையும் பொருட்படுத்தாமல் சட்ட விரோத செயல்களை தொடர்ந்த வண்ணம் இருந்தனர் என்றும், இவ்வாறு இருக்கையில் கடந்த 04.09.2009 அன்று இந்த பிரதிவாதிகள் சில அடியாட்களுடன் தாவா சொத்திற்கு வந்து வாதியின் அனுபவத்தை இடையூறு செய்யும் வண்ணம் அத்துமீறல் செய்ய முயற்சி செய்தார்கள் என்றும், மேற்படியார்களின் சட்டவிரோத செயல்கள் ஊர் பெரியவர் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டது என்றும், எனினும் இந்த பிரதிவாதிகளின் அச்சுறுத்தல் தொடர்ந்த வண்ணம் இருப்பதால் வாதி அவர்களுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா வழக்கினை தாக்கல் செய்ததாக வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார்.

**4) <u>OS No.383/2009ன் எதிர்வழக்குரையின் சுருக்கம் :– (OS No. 499/2009 ன் வழக்குரையின் சுருக்கம்)</u> :–**

4.1) தாவா சொத்து அதை சுற்றியுள்ள சொத்து ஆரம்பத்தில் பிரதிவாதியின் தாத்தா மற்றும் சின்ன தாத்தா ஆறுமுகம் மற்றும்

ராமசாமிக்கு பாத்தியப்பட்டது என்றும், பிரதிவாதியின் தாத்தா ஆறுமுகமும், சின்ன தாத்தா ராமசாமியும் அவர்களுடைய சொத்துக்களை பிரித்துக் கொண்டு அனுபவித்து வரும் நிலையில், பிரதிவாதியின் சின்ன தாத்தா ராமசாமி அவர்களுக்கு கிடைத்த பாகத்தை பிரதிவாதியின் அப்பா கொண்டப்பனுக்கு 04.05.1965ம் ஆண்டு விற்பனை செய்தார் என்றும், அந்த பத்திரத்தில் கிழமேல் அளவு 13 கெஜம் 13x3=39 அடியும், தென்வடல் அளவு 6 கெஜம் 6x3=18 அடியும் என காண்பிக்கப்பட்டுள்ளது என்றும்,

4.2) OS No.383/2009ல் வாதி சொல்லியுள்ள வியாஜ்ஜிய மூலம் தவறானது என்றும், வாதி வியாஜ்ஜிய மூலம் பிரதிவாதியின் தம்பி ஆறுமுகத்தையும், முத்துவேலையும் கட்டுப்படுத்தாது என்றும், வாதி பொதுப்பாதையை பொறுத்து பத்திரமும், எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், அதனால் வாதி கேட்கும் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், பொதுப்பாதை சர்வே எண்.248/32 என்றும், வாதி பத்திரத்தில் உள்ள சர்வே எண்.408/3 என்றும், எனவே OS No.383/2009 வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் எனக்கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

**<u>5) எழுவினாக்கள் :-</u>**

5.1) இந்த இரண்டு வழக்குகளிலும் வாதி, பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் இந்த

வழக்கு சம்மந்தமான அனைத்து ஆவணங்களையும் இந்நீதிமன்றம் கவனமாக நன்கு பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் இந்த நீதிமன்றத்தினால் வனையப்பட்டுள்ளன.

<u>**அசல் வழக்கு எண்.383/2009–ல்**</u>

5.2) கடந்த 23.06.2010ம் தேதியில் இந்த நீதிமன்றத்தால் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

1. தாவா சொத்தில் (அ.வ. எண்.383/2009) வாதிக்கு பாத்திய உரிமை உள்ளதா?
2. அ.வ. எண்.383/2009 தேவையான தரப்பினரை சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா?
3. அ.வ. எண்.383/2009 வாதி தாவா சொத்தில் தனித்த அனுபவத்தில் உள்ளாரா?
4. அ.வ. எண்.383/2009 வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?
5. அ.வ. எண்.383/2009ல் தரப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

<u>**அசல் வழக்கு எண்.383/2009–ல்**</u>

5.3) கடந்த 20.10.2022ம் தேதியில் இந்த நீதிமன்றத்தால்

கீழ்க்கண்ட எழுவினா கூடுதலாக வனையப்பட்டுள்ளது.

6. அ.வ. எண்.383/2009ன் வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

<u>**அசல் வழக்கு எண்.499/2009–ல்**</u>

5.4) கடந்த 09.07.2013ம் தேதியில் இந்த நீதிமன்றத்தால் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

7. தாவா சொத்தில் (அ.வ. எண்.499/2009) வாதிகள் அனுபவத்தில் இருக்கிறார்களா?

8. அ.வ. எண்.499/2009ல் தாவா சொத்து விவரம் தவறானதா?

9. அ.வ. எண்.499/2009 வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

10. அ.வ. எண்.499/2009ல் வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

<u>**6) சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u> :

6.1) வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்களும், நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.4 வரையிலான

சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் வா.சா.1ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் போது பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6.2) பிரதிவாதிகள் தரப்பில், பி.வா.சா.1 முதல் பி.வா.சா.4 வரையிலானவர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.1 மூலமாக பி.வா.சா.ஆ.5 முதல் பி.வா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**எழுவினாக்களுக்கான தீர்வு** :

**7) எழுவினாக்கள் 1, 3 மற்றும் 7 –க்கான தீர்வு** :–

1. தாவா சொத்தில் (அ.வ. எண்.383/2009) வாதிக்கு பாத்திய உரிமை உள்ளதா?

3. அ.வ. எண்.383/2009 வாதி தாவா சொத்தில் தனித்த அனுபவத்தில் உள்ளாரா?

7. தாவா சொத்தில் (அ.வ. எண்.499/2009) வாதிகள் அனுபவத்தில் இருக்கிறார்களா?

7.1) தாவா சொத்தானது வாதிக்கு வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 கிரைய ஆவணங்களின் படி பாத்தியப்பட்டது என்றும், இந்நிலையில் வழக்கு

சொத்தை வாதி காலி இடமாக விட்டு பராமரித்து அனுபவம் செய்து வந்தார் என்றும், மேற்படி வாதியின் இடத்தை பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்ததால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

7.2) மாறாக, பிரதிவாதிகள் தரப்பில் வாதி கூறும் அசல் வழக்கு 383/2009 சொத்தானது பொதுப்பாதை என்று எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு 499/2009 வழக்கு சொத்தை பொறுத்து பிரதிவாதிகளின் அனுபவத்தை வாதி இடைஞ்சல் செய்யாது இருக்கும் விதமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு 499/2009 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7.3) மேற்படி, பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு 499/2009 வழக்கானது சொத்து விவரம் தவறாக உள்ளது என்றும், வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பிரதிவாதிகளால் அசல் வழக்கு 499/2009 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

7.4) இரண்டு வழக்குகளிலும் நீதிமன்ற ஆணையர்கள் நியமனம் செய்யப்பட்டு ஆணையர்கள் அறிக்கைகள் மற்றும் வரைபடங்கள்

தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது முறையே நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்பாடி நீ.ம.சா.ஆ.3 ஆணையர் அறிக்கையில் பிரதிவாதிகளின் 1965ம் ஆண்டு பத்திரப்படி உள்ள அளவுகள்படி அளந்து பார்த்ததில் தென்வடல் 18 அடியில் OS No.383/2009ன் தாவா சொத்து 3 1/2 அடி வரை உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நீ.ம.சா.ஆ.1 அறிக்கையில் மேற்படி அதே அளவு 3 அடியாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி அசல் வழக்கு 499/2009 வழக்கு சொத்தில் கண்டுள்ள அளவுகள்படி பிரதிவாதிகள் அனுபவம் செய்யவில்லை என்று நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.3ன்படி தெரியவருகிறது.

7.5) மேலும், வாதி பத்திரப்படி வழக்கு சொத்தை அளந்து பார்த்தபோது, தென்வடல் 58 அடி அளவில் தாவா இடமும் சேர்த்து 57 அடி தான் இருந்தது என்றும், 1 அடி குறைவாகவே உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. வாதி வழக்கு சொத்து 1979, 1980ல் ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 கிரைய ஆவணங்களின் படி பாத்தியப்பட்டது என்று வாதம் செய்துள்ளார். பிரதிவாதி 1965ல் ஏற்படுத்தப்பட்ட பி.வா.சா.ஆ.7 கிரைய ஆவணத்தின் படி அசல் வழக்கு 499/2009 வழக்கு சொத்து பாத்தியப்பட்டது என்று வாதம் செய்துள்ளார். இந்நிலையில், வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.7 ஆகிய ஆவணங்கள் 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட

ஆவணங்களாக இருந்த போதிலும், மேற்படி ஆவணங்களில் உள்ள அளவுகள் சட்டப்படியான அளவுகள் என்று இருதரப்பிலும் நிரூபணம் செய்யும்விதமாக மேற்படி ஆவணங்களின் மூல ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிரூபணம் செய்யவில்லை.

7.6) மேலும், நீ.ம.சா.ஆ.3 அறிக்கையில் கண்டுள்ளவாறு வாதியின் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தின்படி தென்வடல் 58 அடி பூமியில் இல்லை என்று தெரிய வருகிறது. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தின்படி பிரதிவாதிகள் தாவா வழக்கு 499/2009 வழக்கு சொத்து முழுவதும் அனுபவத்தில் இல்லை என்று தெரியவருகிறது. மேலும், பி.வா.சா.ஆ.7ல் கண்ட சொத்தானது அசல் வழக்கு எண்.383/2009ன் வழக்கு சொத்தின் ஒரு பகுதியை உள்ளடக்கி காணப்பட்டுள்ளதாக நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.3 அறிக்கைகளில் காணப்பட்டுள்ளது.

7.7) அசல் வழக்கு எண்.383/2009ன் வழக்கு சொத்தானது பொதுப்பாதை என்று பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் செய்த நிலையில், OS No.499/2009 வழக்கு சொத்து முழுவதும் பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்ற பிரதிவாதிகளின் வாதமானது சட்டப்படியானதாக இல்லை. அசல் வழக்கு எண்.383/2009 வழக்கின் தற்போதைய புல எண்.248/32 என்றும், அது தற்போது வருவாய் துறை

ஆவணங்களில் தெரு மற்றும் வீதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், வாதியின் கிரைய ஆவணங்களான வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களின் படி OS No.383/2009ல் வழக்கு சொத்து காணப்படாததாலும், மேற்படி வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களை சட்டப்படியான ஆவணங்கள் என் நிரூபணம் செய்யாததாலும் அசல் வழக்கு எண்.383/2009 வழக்கு சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்றும், வாதிகள் வழக்கு சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றும், மேலும் அசல் வழக்கு எண்.499/2009 வழக்கின் வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் சட்டப்படியாக முழு அனுபவத்தில் இல்லை என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அதன்படி எழுவினா–1, 3 வாதிக்கு எதிராகவும், எழுவினா–7 பிரதிவாதிகளுக்கு எதிராகவும் தீர்வு காணப்படுகிறது

**<u>8) எழுவினா 2–க்கான தீர்வு</u>** :–

2. அ.வ. எண்.383/2009 தேவையான தரப்பினரை சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா?

8.1) அ.வ.எண்.383/2009 தேவையான தரப்பினரை சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதிவாதிகள் தரப்பில் எடுத்துரைத்த போதும், அதனை நிரூபணம் செய்யும் விதமாக பிரதிவாதிகள் தரப்பில்

சாட்சி, சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை. எனவே, அசல் வழக்கு எண்.383/2009ல் தேவையான தரப்பினரை சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதிவாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினா–2ற்கு பிரதிவாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**<u>9) எழுவினாக்கள் 4, 6 –க்கான தீர்வு</u>** :–

4. அ.வ. எண்.383/2009 வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

6. அ.வ. எண்.383/2009ன் வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

அசல் வழக்கு எண்.383/2009 வழக்கு சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்றும், வாதிகள் வழக்கு சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றும், இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில் அசல் வழக்கு எண்.383/2009ல் வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், விளம்புகை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினாக்கள்–4, 6 ற்கு வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**<u>10) எழுவினாக்கள் 9-க்கான தீர்வு</u>** :-

9. அ.வ. எண்.499/2009 வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

அசல் வழக்கு எண்.499/2009 வழக்கின் வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் சட்டப்படியாக முழு அனுபவத்தில் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினா-7ற்கு பிரதிவாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், அசல் வழக்கு எண்.499/2009 வழக்கின் வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினா-9ற்கு பிரதிவாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**<u>11) எழுவினா 8-க்கான தீர்வு</u>** :-

8. அ.வ. எண்.499/2009ல் தாவா சொத்து விவரம் தவறானதா?

அ.வ. எண்.499/2009ல் தாவா சொத்து விவரம் தவறானது என்று வாதி தரப்பில் எடுத்துரைத்த போதும், அதனை நிரூபணம் செய்யும் விதமாக வாதி தரப்பில் எவ்வித சாட்சி, சான்றாவணங்கள் எதுவும் வாதி

தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே அ.வ. எண்.499/2009ல் தாவா சொத்து விவரம் தவறானது என்று வாதி தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினா–8ற்கு வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**<u>12) எழுவினாக்கள் 5,10 –ற்கான தீர்வு :–</u>**

5,10 தரப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

மேற்படி வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகளின்படி தரப்பினர்களுக்கு மேற்கண்டவாறு அவர்கள் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினாக்கள் 1 முதல் 9 வரையிலானவைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ள நிலையிலும், இவ்வழக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளின்படி தரப்பினர்களுக்கு வேறு பரிகாரங்கள் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றே 5. 10 எழுவினாக்களுக்கு விடை காணப்படுகிறது.

**முடிவாக;**

**அசல் வழக்கு எண்.383/2009** – வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

மேலும், **அசல் வழக்கு எண்.499/2009** – வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 02.04.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.02 14:32:35 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

**இணைப்பு** :-

1. **வாதி தரப்பு சாட்சிகள்** :
   வா.சா.1. கொண்டப்பன்

2. **வாதி தரப்பு சான்றாவணங்கள் :**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1. | மாதிரி வரைபடம் அசல். |
| வா.சா.ஆ.2. | 25.04.1979ம் தேதியிட்ட கிரைய பத்திரம் அசல். |
| வா.சா.ஆ.3. | 30.06.1980ம் தேதியிட்ட கிரைய பத்திரம் அசல். |
| வா.சா.ஆ.4. | 20.02.2009ம் தேதியிட்ட வீட்டு வரி ரசீது அசல். |

**3. பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :**

பி.வா.சா.1. ராவுத்தன்
பி.வா.சா.2. குருவத்தாய்
பி.வா.சா.3. முத்துவேல்
பி.வா.சா.4. முருகன்

**4. பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :**

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ.1. | 24.04.2010ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு நகல். |
| பி.வா.சா.ஆ.2. | 05.03.2011ம் தேதியிட்ட பதில் வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு நகல். |
| பி.வா.சா.ஆ.3. | 17.02.2010ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு. |
| பி.வா.சா.ஆ.4. | அ.வ. எண்.499.2009ல் வழங்கப்பட்ட தடையுறுத்தரவு. |
| பி.வா.சா.ஆ.5. | மாதிரி வரைபடம் அசல். |
| பி.வா.சா.ஆ.6. | கொடிவழி ஜாபிதா அசல். |
| பி.வா.சா.ஆ.7. | 04.05.1965ம் தேதியிட்ட கிரைய ஆவணம் அசல். |
| பி.வா.சா.ஆ.8. | 25.12.2007ம் தேதியிட்ட வீட்டு வரி இரசீது அசல். |
| பி.வா.சா.ஆ.9. | 1ம் பிரதிவாதி தந்தை பெயரில் உள்ள வீட்டு வரி இரசீது(10 எண்ணம்) அசல். |

**5. நீதிமன்ற சாட்சிகள் :** இல்லை.

**6. நீதிமன்ற சான்றாவணங்கள் :**

| | |
|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | நீதிமன்ற அறிக்கை மற்றும் கோப்புகள். |
| நீ.ம.சா.ஆ.2 | நீதிமன்ற ஆணையரின் வரைபடம். |
| நீ.ம.சா.ஆ.3 | அ.வ.எண்.499/2009 என்ற வழக்கு சொத்தை நீதிமற் ஆணையர் அளவீடு செய்து தாக்கல் செய்த அறிக்கை மற்றும் கோப்புகள். |
| நீ.ம.சா.ஆ.4 | நீதிமன்ற ஆணையரின் வரைபடம். |

**7. சாட்சிய சான்றாவணங்கள் :** இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.02 14:32:46 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

அசல் வழக்கு எண்.383/2009
மற்றும்
அசல் வழக்கு எண்.499/2009
பொதுவான செவ்வை – தீர்ப்புரை
நாள்: 02.04.2026